**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| O.S.No. 62/2023 | Date : 07.07.2026 | PW 1 |
|---|---|---|
| Name: சின்னமணி | க/பெ.கோபால் | |

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

யார் யார் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பழனியம்மாள், பழனிவேல், ஐயந்துரை, ஐயம்பெருமாள் ஆகீயோர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பின்னிட்டு வீடு காலிசெய்யவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தின் சர்வே எண். 68/3E ஆகும். மேற்படி நிலத்தின் விஸ்தீரணம் 38 செண்ட் ஆகும். மேற்படி 38 செண்ட் பூமியிலும் என்னை எங்களது சுவாதீனத்தை பிரச்சினை செய்து என்னை துரத்திவிட்டதால் அவர்களை வெளியேற்றி எனக்கு சுவாதீனம் வேண்டும் என கேட்டுள்ளேன். பழனியம்மாள், ஜெகதாம்பாள், அய்யந்துரை ஆகியோர்கள் சேர்ந்து எனது பாட்டி, எனது தாயார் மற்றும் என் மீது வழக்கு அசல் வழக்கு எண். 133/2022 தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பாகப்பிரிவினை கேட்டும், 29.01.2010 மற்றும் 19.02.2018 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என கோரியும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நான் பழனியம்மாள் என்பவர் மீது மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 165/2023 வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு முதன்மை மாவட்ட உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாறுதலாகி அ.வ.எண். 85/2026 என பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மூன்று வழக்குகளையும் ஒருசேர நடத்தவேண்டும் என்று உத்தரவாகியுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் அண்ணாமலைக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றாலும் அதற்கு நான் மூல ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் அம்மா பெயரில் உள்ள உயில் பத்திரத்தையும் அதை ரத்து செய்த பத்திரத்தையும் தாக்கல் செய்துள்ளேன். அருணாசலத்திற்கு அண்ணாமலை மட்டும் தான் வாரிசு என்பதை காட்டுவதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் அண்ணாமலைக்கு ஆனந்தி மட்டும் தான் வாரிசு என்பதை காட்டுவதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனந்தியும்,

அண்ணாமலையும் எனக்கு 2018ம் ஆண்டு தான செட்டில்மெண்ட் எழுதிகொடுத்தார்கள். தானசெட்டில்மெண்ட் எழுதிக் கொடுக்கும்போது அண்ணாமலைக்கு சுமார் 93 வயது இருக்கும். எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்த அண்ணாமலைக்கு நடக்க முடியாமல் கண் பார்வை யில்லாமல் புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அண்ணாமலையின் வயோதிகத்தை பயன்படுத்தி நான் செட்டில்மெண்ட் ஆவணம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. பழனியம்மாள் எனக்கு அக்கா உறவு ஆவார். பழனிவேல் பழனியம்மாளின் வீட்டுக்காரர். அய்யந்துரை எனது தம்பி. அய்யம்பெருமாள் எனது தகப்பனார் ஆவார்கள். வழக்கு சொத்து ஆரம்பத்தில் அண்ணாமலைக்கு பரம்பரையாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அண்ணாமலைக்கு பரம்பரையாக பாத்தியப்பட்ட சொத்தாக உள்ளபோது தனிப்பட்ட முறையில் எனக்கு அவர் செட்டில்மெண்ட் எழுதி வைக்க முடியாது என்றால் சரியல்ல. மூதாதையர் சொத்தை பொறுத்து மற்ற பங்குதாரர்கள் இருக்கும்போது எனக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் அண்ணாமலை எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டத்தின்பால் செல்லத்தக்கத்தல்ல என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் சட்டத்தின்பால் செல்லக்கூடிய ஆவணம் இல்லைஎன்றாலும் மேற்படி ஆவணம் மோசடியாக என்னால் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. பழனியம்மாள், அய்யந்துரை ஆகியோரும் ஆனந்தி அய்யம்பெருமாள் தம்பதிக்கு பிறந்தவர்கள் என்றால் சரிதான். அண்ணாமலைக்கு மூன்று பேரன் பேத்திகள் உள்ளபோது எனக்கு மட்டும் தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. நான் தான் என் தாத்தா அண்ணாமலையை கடைசி சமயத்தில் பார்த்துக்கொண்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தாத்தா அண்ணாமலையை 2010ம் ஆண்டு முதல் இறக்கும்வரை நான்தான் பார்த்தேன். மற்றவர்களை பார்ப்பதற்கு நான் அனுமதிக்கவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் என்னுடன் தான் வசித்து வந்தார். நான் சொல்வது தவறு என்றும் என் அக்கா, அண்ணன் ஆகிய அனைவரும்தான் அண்ணாமலையை பார்த்துகொண்டார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது தாத்தாவிற்கு எவ்வளவு செலவு செய்தேன் என்றால் நான்தான் செலவு செய்தேன் அதை நான் கணக்கு பார்க்கவில்லை. சுமமார் 10 லட்சம் இருக்குமா என்றால் இருக்கும். நான் எனது தாத்தாவிற்கு செலவு செய்ததால்தான் அவர் எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி

கொடுத்தார் என்றால் சரிதான். நான் எனது தாத்தாவின் விருப்பமில்லாமல் கட்டாயப்படுத்தி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது தாயாரும் சேர்ந்து மற்ற பிள்ளைகளை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் போர்ஜரியாக தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த செட்டில்மெண்ட் ஆவணம் பிரதிவாதிகளின் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**

ஒம்/–**சின்னமணி**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.